தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 006/பேரூ/2021

நாள் 16.12.2021

திரு. K. சுப்பையா,
உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

1. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்)
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி.
2. திரு. M. ரங்கசாமி,
முன்னாள் செயல் அலுவலர்,
உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி
3. திரு. இரா. பாலசுப்பிரமணியன்,
முன்னாள் செயல் அலுவலர் (கூ/பொ)
உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி
4. திரு. பரமசிவம்,
இளநிலை உதவியாளர்,
உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி
5. திரு. கோபால்,
முன்னாள் வரித் தண்டலர்,
உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி ... எதிர்மனுதாரர்கள்

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, 31/4 நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. சுப்பையா என்பவரின் 06.05.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 006/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, 31/4 நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. K. சுப்பையா என்பவர் தமது 6.5.2020 நாளிட்ட மனுவில் உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி நிர்வாகத்தில் பல்வேறு அதிகார துஷ்பிரயோகங்களும், பணமுறைகேடுகளும், பணக்கையாடல்களும் நடைபெற்றிருப்பதை அறிந்து தான் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.No.11536/2017 தாக்கல் செய்து, தவறிழைத்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரியதாகவும், அதனைத் தொடர்ந்து தவறிழைத்த அதிகாரிகளுக்கு எதிராக பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுக்க செயல்முறை ஆணை பிறப்பித்ததாகவும், அதன்படி அதுவரை உடன்குடி பேரூராட்சியில் பணியிலிருந்த 17 நபர்கள் மீது குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது என்றும், அவ்வாறு குற்றம் சாட்டப்பட்ட பணியாளர்களில் ஒருவரான திரு. ரங்கசாமி அவர்கள் பின்னர் நாசரேத் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வந்தார் என்றும், அவருக்கு, ஏற்கனவே அவர் பணிபுரிந்த உடன்குடி பேரூராட்சிக்கான முழு கூடுதல் பொறுப்பு 9.3.2019ல் கொடுக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர், உடன்குடி பேரூராட்சிக்கு பல்வேறு வகையிலான வரவான ரூ.33,22,313/– (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து முன்னூற்று பதிமூன்று மட்டும்) தொகையை திரு. M. ரங்கசாமி அவர்கள் 16.4.2019 வரை வங்கியில் செலுத்தாமல் தன்னிடம் வைத்து பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தினார். இந்த தற்காலிக கையாடல் 2018–2019க்கான தணிக்கை அறிக்கையிலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், உடன்குடி பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட வார சந்தையை 2019–2020ஆம் ஆண்டிற்கான ஏலத்தில் எடுத்த குத்தகைதாரர் T. சோமசுந்தரம் அவர்கள் செலுத்திய ரூ.14,71,365/–ஐ (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) இளநிலை உதவியாளர் திரு. சோ. பரமசிவன், வரித் தண்டலர் திரு. ந. கோபால் மற்றும் செயல் அலுவலர் திரு. M. ரங்கசாமி ஆகியோர் 16.4.2019 அன்று பணத்தை பெற்றுவிட்டு, பேரூராட்சி கணக்கில் கொண்டுவராமல் கையாடல் செய்துவிட்டனர். பின்னர் உதவி இயக்குநர் விசாரணை செய்து அந்த பணக்கையாடலில் சம்மந்தப்பட்ட மேற்கூறிய நபர்களை 03.09.2019 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்தார்.

மேற்குறிப்பிடப்பட்ட நபர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட அதேநாளிலும், அடுத்த நாளிலும், அதற்கடுத்த நாளிலும் (03.09.2019 அன்று ரூ.5,15,365/–ம், 4.9.2019 அன்று ரூ.3,30,000/–ம், 5.9.2019 அன்று ரூ.6,26,000/–ம்) கையாடல் செய்யப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுத்ததாகக் கூறி வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு மொத்தமாக கையாடல் செய்யப்பட்ட பணம் மொத்தமாக கட்டப்பட்டதிலிருந்து section 269 (ST) of Income Tax Act மற்றும் Circular No.22 of 2017 dated 03.7.2017 issued by the Ministry of Finance என்ற சுற்றறிக்கையை மீறி செயல்பட்டுள்ளனர். அதற்கு திரு. M. ரங்கசாமி அவர்களுக்குப் பிறகு செயல் அலுவலராக (பொறுப்பில்) இருந்த

திரு. இரா. பாலசுப்பிரமணியன் (3வது எதிர்மனுதாரர்) அவர்களும் மேற்குறிப்பிடப்பட்ட 3 நபர்களைக் காப்பாற்ற ஒத்துழைப்பை நல்கி தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார். அதனால் கருப்புப் பணம் பயன்பாடு நடந்து, அரசுக்கு பண இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், தான் இது தொடர்பான ஆவணங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மூன்றாவது எதிர்மனுதாரரிடம் 6.9.2019 அன்று கோரியதாகவும், ஆனால் குற்றம் சாட்டப்பட்ட 2, 4 மற்றும் 5வது எதிர்மனுதாரர்களை காப்பாற்றவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடும், தீய நோக்கத்தோடும் மூன்றாவது எதிர்மனுதாரர் தன்னுடைய 4.10.2019 தேதியிட்ட பதில் மூலம் தகவல் வழங்க மறுத்துவிட்டு, உடன்குடி பேரூராட்சியின் தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேட்டினை சட்டவிரோதமாக அழித்தும், சட்ட விரோதமாக புதிய தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேட்டினை உருவாக்கியும் குற்றம் புரிந்துள்ளார்.

அதன் பிறகு, 13.11.2019 அன்று தவறிழைத்த மேற்குறிப்பிடப்பட்ட 2, 4 மற்றும் 5வது எதிர்மனுதாரர்களும் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே இவர்களுக்கு எதிராக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு தாம் புகார் செய்து, அதில் ஆணை பிறப்பிக்கக்கோரி மதுரை உயர்நீதிமன்றத்தில் W.P (MD) No.25629 of 2019 தாக்கல் செய்ததாகவும், தம்முடைய ரிட் மனுவில் பரிகாரம் அளிக்காமல், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தினை அணுகி பரிகாரத்தை பெற்றுக்கொள்ள அனுமதி அளித்ததாகவும், அதன் அடிப்படையில் இம்முறைமன்ற நடுவத்தில் தான் பரிகாரம் கோருகிறேன் என்றும் மனுதாரர் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தமது புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட 2, 3, 4 மற்றும் 5வது எதிர்மனுதாரர்கள் மீது நடவடிக்கை ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்றும், இதன் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட நபர்கள் ஆட்பலம் மற்றும் பணபலமும் மிக்கவர்கள் என்பதும் தெளிவாக தெரிகிறதென்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், 2வது எதிர்மனுதாரர் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே பண கையாடல் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள நிலையில், 2வது எதிர்மனுதாரர் மீண்டும் ஒரு தேர்வுநிலை பேரூராட்சியின் பணத்தை கையாள அனுமதிப்பது பேரூராட்சிக்கு நிதியிழப்புக்கு வழிவகுக்கக்கூடியது என்றும் தெரிவித்துள்ளார். எனவே, 2வது எதிர்மனுதாரருக்கு வழங்கியுள்ள பணபரிவர்த்தனை செய்வதற்கான (cheque issuing authority) அதிகாரத்தை விசாரணை முடியும்வரை நிறுத்திவைக்குமாறும், பணம் கையாடல் செய்தல், அதை மறைக்க முயற்சி செய்தல், அரசுக்கு இழப்பு ஏற்படுத்துதல் போன்ற குற்ற நடவடிக்கைகளுக்காக 2வது முதல் 5வது எதிர்மனுதாரர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பிக்குமாறும், 2, 4 மற்றும் 5வது எதிர்மனுதாரர்களை காப்பாற்றும் நோக்கில் 3வது எதிர்மனுதாரர் அவர்கள் மறைத்து, அழித்த உடன்குடி பேரூராட்சியின் தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேட்டினை மீட்டுருவாக்கம் செய்து பேரூராட்சியின் செயல்பாட்டிற்கு கொண்டுவர விசாரணை மேற்கொண்டு உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் திரு. எம். ரங்கசாமி, திரு. இரா. பாலசுப்பிரமணியன், முன்னாள் உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலர்கள், முன்னாள் இளநிலை உதவியாளர் திரு. பரமசிவன், உடன்குடி பேரூராட்சி முன்னாள் வரித் தண்டலர் திரு. கோபால் மற்றும் உடன்குடி பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் ஆகியோர் 07.10.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு, இம்முறைமன்ற நடுவத்தால் 22.9.2021 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. கொரோனா பெருந்தொற்றால் முறையீட்டு மனுதாரர் தனது உடல்நிலை நெடுந்தூர பயணத்திற்கு ஏற்றதாக இல்லை என்று குறிப்பிட்டு, தனது 3.10.2021 நாளிட்ட எழுத்துபூர்வமான வாக்குமூலத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

3. மனுதாரர் அளித்துள்ள 3.10.2021 நாளிட்ட எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் 2019–2020 ஆண்டிற்கு சந்தையை ஏலம்விட்டதில் குத்தகைதாரர் திரு. சோமசுந்தரம் என்பவர் செலுத்திய ரூ.14,71,365/–ஐ (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) பேரூராட்சி கணக்கில் கொண்டுவராமல், இளநிலை உதவியாளர் திரு. சோ. பரமசிவன், வரித்தண்டலர் திரு. ந. கோபால் மற்றும் செயல் அலுவலர் திரு.M. ரெங்கசாமி ஆகியோர் கையாடல் செய்தனர். இதனை அப்போதைய உதவி இயக்குநராக இருந்த திரு. மாஉறின் அபூபக்கர் அவர்கள் மற்றும் உதவி இயக்குநர் அலுவலக பொறுப்பு அலுவலர்கள் உறுதி செய்து, கையாடலில் ஈடுபட்ட மேற்படி 3 நபர்களை தற்காலிக பணிநீக்கம் செய்தார். கையாடல் செய்யப்பட்ட ரூ.14,71,365/– (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) உடன்குடி பாரத ஸ்டேட் வங்கியில் 3.9.2019 அன்று ரூ.5,15,365/– (ரூபாய் ஐந்து லட்சத்து பதினைந்தாயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்), 4.9.2019 அன்று ரூ.3,30,000/– (ரூபாய் மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மற்றும் 5.9.2019 அன்று ரூ.6,26,000/– (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி ரொக்கப் பரிவர்த்தனை Income Tax Act 269 (ST), Income Tax Circular No.22 of 2017 dated 3.7.2017 issued by the Ministry of Finance–க்கு எதிரானது. மேலும், மேற்படி ரொக்க பரிவர்த்தனைகள் கருப்புப்பண பயன்பாடு என்பதும், அரசு ஊதியம் பெறும் நபர்கள் 3 நாட்களில் ரூ.14,71,365/– ஐ (ரூபாய் பதிநான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) ரொக்கமாக செலுத்தியதிலிருந்து கருப்புப்பண பயன்பாட்டை செய்து அரசுக்கு பண இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். அரசுக்கு எதிராக கருப்புப் பண பயன்பாடு செய்தல், பேரூராட்சி பணத்தை கையாடல் செய்தல் மற்றும் பல்வேறு விதிமீறிய செயல்பாடுகளை செய்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட திரு. M. ரங்கசாமி அவர்களுக்கு விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்படாமலும், குற்ற நடவடிக்கைகளுக்கு தண்டனை ஏதும் வழங்கப்படாமலும், மீண்டும் பணி வழங்கப்பட்டது மேற்படி நபர் செய்த தவறை ஊக்குவித்தல் போன்றது மற்றும் சட்ட விதிமீறிய செயல் என்பதையும் முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு கொணர விழைகிறேன் என்று கூறியுள்ளார்.

4. உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் கையாடல் செய்த நபர்களை காப்பாற்றும் நோக்கத்தில் திரு. M. ரெங்கசாமி அவர்கள் காலத்திய தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேடுகளை 3வது எதிர்மனுதாரரான திரு. இரா. பாலசுப்பிரமணியம் அவர்கள் அழித்துள்ளார்கள். இது சாட்சியாவணம் 1–ல், வரிசை எண்.5க்கு வழங்கப்பட்ட தகவல் வழியாக ஆதாரபூர்வமாகிறதென்று தெரிவித்துள்ளார். உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் ரூ.33,22,313/– (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து இருபத்ரெண்டாயிரத்து முன்னூற்று பதிமூன்று மட்டும்) தொகையை திரு. M. ரங்கசாமி அவர்கள் தற்காலிக கையாடல் செய்தது 2018–2019 தணிக்கை அறிக்கையில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மேலும், 2019–2020ஆம் ஆண்டிற்கான சந்தை குத்தகை பணம் ரூ.14,71,365/– (ரூபாய் பதிநான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) கையாடல் செய்யப்பட்டதும் தணிக்கை அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளதை இணைத்தனுப்பியுள்ளார். மேற்படி குற்றச் செயல்களுக்கு நடவடிக்கை எடுக்கக்கோரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையை அணுகி ஆணை பிறப்பிக்கக்கோரி மாண்பமை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த W.P.(MD) No.25629 of 2019–ல் தீர்ப்பில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை அணுகி பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. கையாடல், கருப்புப் பணம் பயன்பாடு செய்தல், ஆவணங்களை திட்டமிட்டு அழித்தல் மற்றும் அரசுக்கு எதிராக செயல்பட்ட நபர்கள் ஆள்பலம் மற்றும் அதிகார பலம்கொண்டவர்கள். மேலும் உடன்குடி பாரத ஸ்டேட் பாங்கில் செலுத்திய கருப்புப் பண பரிவர்த்தனையை மறைக்க தற்போது அனுமதி பெறாமலும், அரசு புறம்போக்கில் கட்டப்பட்ட கட்டுமானத்தில் வங்கி இயங்க உடன்குடி பேரூராட்சி நிர்வாகம் உதவி செய்து வருகிறது. இது தொடர்பாக புகார் மனு அளித்தும் கூராய்வு அலுவலர் ஆய்வு நடத்தியும், சட்ட விதிமீறல்கள் தொடர்பான செயலுக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது கருப்புப்பண பயன்பாடுகளுக்கு பேரூராட்சிக்கு வங்கி அதிகாரிகள் செய்த செயலுக்கு கைமாறான செயல் என்பதையும் முறைமன்ற கவனத்திற்கு கொண்டுவருவதாக குறிப்பிட்டு, புகார் மனுவில் குறிப்பிட்ட 2வது எதிர்மனுதாரருக்கு வழங்கியுள்ள பண பரிவர்த்தனை செய்வதற்கான (cheque issuing authority) அதிகாரத்தை விசாரணை முடியும்வரை நிறுத்தி வைக்கவேண்டும். மேலும், பணம் கையாடல் செய்தல், அதை மறைக்க முயற்சி செய்தல், அரசுக்கு இழப்பு ஏற்படுத்துதல் போன்ற குற்ற நடவடிக்கைகளுக்காக 2வது முதல் 5வது எதிர்மனுதாரர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பிக்குமாறும், 2,4 மற்றும் 5வது எதிர்மனுதாரர்களை காப்பாற்றும் நோக்கில் 3வது எதிர்மனுதாரர் அவர்கள் மறைத்து அழித்த உடன்குடி பேரூராட்சியின் தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேட்டினை மீட்டுருவாக்கம் செய்து பேரூராட்சியின் செயல்பாட்டிற்கு கொண்டவர எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. உடன்குடி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலராக (பொறுப்பு) பணியாற்றி தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், புழுவப்பட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரியும் திரு. ம. ரெங்கசாமி 7.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கடந்த 9.3.2019 முதல் 3.9.2019 வரை தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) பணியாற்றிய காலத்தில்,

பேரூராட்சிக்குட்பட்ட வார சந்தையை 2019–2020 ஆம் ஆண்டு ஏலமிட்டு, குத்தகைதாரர் திரு. சோமசுந்தரம் என்பவர் செலுத்திய தொகையை உடன்குடி பேரூராட்சியில் பணியாற்றிய திரு. பரமசிவம், இளநிலை உதவியாளர் மற்றும் திரு. கோபால், வரித் தண்டலர் ஆகிய இருவரும் தற்காலிகமாக கையாடல் செய்து பின்னர் காலதாமதமாக பேரூராட்சி கணக்கில் செலுத்தியதில் நான் எதுவும் தவறு செய்யவில்லை எனவும், இது தொடர்பாக நான் பணியாற்றிய காலத்தில் மேற்கண்ட இருவரிடமும் உடனடியாக செலுத்தவேண்டிய தொகையை குத்தகைதாரரிடம் வசூல்செய்து செலுத்தவும் சொன்னேன். இதைத் தவிர எவ்வித நடவடிக்கையும் என்னால் எடுக்கப்படவில்லை எனவும், ஆனால், மேற்கண்ட இருவரும் மாவட்ட ஆட்சியரால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர் எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. உடன்குடி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலராக (பொறுப்பு) பணியாற்றி தற்போது கயத்தாறு பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரியும் திரு. ரா. பாலசுப்பிரமணியன் 7.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கடந்த 4.9.2019 முதல் 29.10.2019 வரை தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) பணியாற்றிய காலத்தில் பேரூராட்சிக்குட்பட்ட வார சந்தையை 2019–2020ஆம் ஆண்டு ஏலமிட்டு, குத்தகைதாரர் திரு. சோமசுந்தரம் என்பவர் செலுத்திய தொகையை உடன்குடி பேரூராட்சியில் செலுத்தியிருந்தார். மேற்கண்ட தொகை காலதாமதமாக பேரூராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது தணிக்கைத் துறை பத்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. நான் பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) பணியேற்பு செய்தவுடன் மேற்கண்ட இருவரும் தற்காலிகமாக கையாடல் செய்த விவரம் உதவி இயக்குநரிடம் தகவலாக தெரிவிக்கப்பட்டது. கையாடல் செய்த மேற்கண்ட இருவரும், நான் பணியேற்ற ஓரிரு நாளிலேயே, அதாவது 4.9.2019 மற்றும் 5.9.2019 ஆகிய நாட்களில் அத்தொகையை பேரூராட்சிக் கணக்கில் செலுத்திவிட்டனர். மேற்கண்ட பேரூராட்சியில் இரண்டுமாத காலம் மட்டுமே பணியாற்றியதால் தணிக்கைத் தடையில் தாமதமாக கட்டப்பட்ட தொகைக்கான வட்டியாக 8 சதவீத தொகையை குற்றம் சாட்டப்பட்ட இருவரிடமிருந்தும் வசூல் செய்திட இயலவில்லை எனவும் மேற்கண்ட இருவருக்கும் ஆதரவாக நான் செயல்படவில்லை எனவும், மேலும் 4.9.2019–இல் பணி ஏற்றவுடன் ஒப்பந்ததாரர் T. சோமசுந்தரம் என்பவர் அலுவலகத்திற்கு வந்து கடிதம் கொடுத்ததன் அடிப்படையில், அவர் செலுத்திய பணத்திற்கு இரசீது வழங்கப்பட்டது என்றும், மேற்கண்ட பேரூராட்சியில் நான் பணியாற்றிய காலத்தில் மேற்கண்ட இருவர் மீதும் எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, ஆனால், மேற்கண்ட இருவரும் மாவட்ட ஆட்சியரால் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டனர் எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

7. உடன்குடி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரியும் திரு. பா. பாபு என்பவர் 7.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலராக

கடந்த 6.7.2020 முதல் தற்போது வரை பணியாற்றி வருகிறேன். உடன்குடி பேரூராட்சிக்குட்பட்ட வார சந்தையை திரு. சோமசுந்தரம் என்பவர் குத்தகைக்கு எடுத்து அதற்கான தொகையை பேரூராட்சியில் செலுத்தியிருந்தார். உடன்குடி பேரூராட்சியில் பணியாற்றிய திரு. பரமசிவம், இளநிலை உதவியாளர் மற்றும் திரு. கோபால், வரித்தண்டலர் ஆகிய இருவரும் மேற்கண்ட தொகையை தற்காலிகமாக கையாடல் செய்து, பின்னர் பேரூராட்சி கணக்கில் செலுத்தியுள்ளனர். மேற்கண்ட தொகை கால தாமதமாக பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது எனவும், எனவே காலதாமதமாக பேரூராட்சி கணக்கில் செலுத்திய சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் 8 சதவீத வட்டித் தொகையை வசூலிக்கவேண்டும் எனவும், தணிக்கை பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், மேற்கண்ட வட்டித் தொகையை சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வசூலிக்க நடவடிக்கை ஏதும் என்னால் எடுக்கப்படவில்லை என்பதையும், மேலும், வட்டித்தொகை வசூல் தொடர்பாக எவ்வித செயல்முறை ஆணையும் (Proceedings) வெளியிடவில்லை எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக எனது 6.10.2021 நாளிட்ட அறிக்கையினை இம்முறைமன்றத்தில் எனது மேல் விளக்கமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

8. உடன்குடி பேரூராட்சியின் முன்னாள் வரிவசூலராக பணியாற்றி தற்போது திருவைகுண்டம் பேரூராட்சியில் வரித் தண்டலராக பணிபுரியும் திரு. N. கோபால் 7.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "உடன்குடி பேரூராட்சிக்குட்பட்ட வார சந்தையை திரு. சோமசுந்தரம் என்பவர் குத்தகைக்கு எடுத்து, அதற்கான தொகையை பேரூராட்சியில் செலுத்தியிருந்தார். உடன்குடி பேரூராட்சியில் நான் வரி தண்டலராக பணியாற்றியபோது குத்தகை தொகையை பேரூராட்சி கணக்கில் காலதாமதமாக செலுத்திய நேர்வில் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனவும், நான் தவறு ஏதும் செய்யவில்லை எனவும், மேலும் மேற்கண்ட குத்தகைத் தொகையை அப்பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு. பரமசிவம் என்பவருடன் சேர்ந்து நான் தற்காலிகமாக கையாடல் செய்யவில்லை" என இம்முறைமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

9. உடன்குடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி, தற்போது தற்காலிக பணிநீக்கத்தில் உள்ள திரு. பரமசிவன் என்பவர் 7.10.2021 அன்றைய இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றியபோது வார சந்தைக்கான ஏலம் 2019–2020ல் நடைபெற்றது. குத்தகைதாரர் திரு. சோமசுந்தரம் ஏலத்தை எடுத்து குத்தகை பணத்தை பேரூராட்சியில் செலுத்தியிருந்தார். மேற்கண்ட காலகட்டத்தில் சொத்துவரி வசூல் பேரூராட்சியில் மிகக் குறைவாக இருந்ததால், சொத்து வரியை நேர்செய்வதற்காக (Nil balance) மேற்கண்ட ஏலத்தொகையை சொத்துவரி வசூலாக மாற்றி செலுத்தினேன் என்றும், பின்னர் சொத்துவரி செலுத்தத் தவறியவர்களிடமிருந்து வரி வசூல் செய்து, மேற்கண்ட

தொகையை காலதாமதமாக பேரூராட்சி கணக்கில் என்னால் செலுத்தப்பட்டுவிட்டது" என்று தெரிவித்துள்ளார்.

10. உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. பாபு தமது வாக்குமூலத்துடன் அளித்துள்ள அறிக்கையில், முறையீட்டு மனுதாரர் திரு. சு. சுப்பையா என்பவர் 9.8.2019 தேதியிட்டு உடன்குடி பேரூராட்சி நிர்வாகத்தில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளது என்றும் அதனை விசாரணை செய்யவேண்டும் என்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநர் ஆகியோர்களை பிரதிவாதியாக்கி, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடர்ந்த வழக்கு எண். W.P(MD).No.25629/2019, மாண்புமிகு நீதிமன்றத்தால் 4.12.2019–இல் விசாரணைக்கு எடுக்கப்பட்டதில், ஏற்கனவே இம்முறையீட்டுதாரரின் புகாரின் அடிப்படையில் உடன்குடி பேரூராட்சியில் பணியாற்றிவந்த முன்னாள் செயல் அலுவலர், பொறியாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் என மொத்தம் 17 பேர்கள் மீது தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு வழக்கினை தள்ளுபடி செய்தும், மனுதாரருக்கு, அவர் விரும்பினால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில், முறையீடு செய்துகொள்ளலாம் என்று ஆணையிடப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டது. மேற்படி நீதிப்பேராணையின்படி முறையீட்டுதாரரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு, மிகவும் காலம் கடந்து, 6.5.2020–இல் மீண்டும் மாண்பமை நீதிமன்றத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள போதிலும், புகாரில் உள்ள சாராம்சம் குறித்து ஏற்கனவே பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் 17 நபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளதை அடிப்படையாக வைத்து, முன்னாள் செயல் அலுவலர் திரு. ரெங்கசாமி என்பவர் அவர் பணியாற்றிவரும் செயல் அலுவலர் பதவிக்கான காசோலை வழங்கும் அதிகாரத்தை நிறுத்திவைக்கவும், திரு. எம். ரெங்கசாமி, திரு. ரா. பாலசுப்பிரமணியன், திரு. சோ. பரமசிவம், திரு. ந. கோபால் ஆகிய நான்கு பணியாளர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், உடன்குடி பேரூராட்சி அலுவலக தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேட்டினை செயல்பாட்டிற்கு கொண்டுவரவும் கோரி முறையீடு செய்யப்பட்டுள்ளது. இம்முறையீடு புகார் மனுதாரரால் பேரூராட்சி குத்தகை தொகையினை பேரூராட்சி செயல் அலுவலர், இளநிலை உதவியாளர் மற்றும் வரி வசூலர் ஆகியோர் தற்காலிக கையாடல் செய்துவிட்டதாகக் குறிப்பிட்டு, அதன் அடிப்படையில், மேல் விசாரணை மற்றும் குற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று வேண்டப்பட்டுள்ளது. ஆனால் இப்புகாருக்கு முக்கிய காரணமான பேரூராட்சிக்குச் சொந்தமான வார சந்தையின் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமையினை குத்தகைக்கு பெற்றிருந்த திரு. த. சோமசுந்தரம் என்பவர் 2019–2020ஆம் ஆண்டிற்கு மேற்படி சந்தைக்கான மொத்த குத்தகை தொகையினையும் அலுவலகத்தில் முறையாக வங்கி வரைவோலை அல்லது வங்கி காசோலை மூலமோ நேரடியாக செயல் அலுவலரிடம் செலுத்தி, அதற்கான உரிய ரசீதினை பெற்றிருக்கவேண்டிய பொறுப்புடையவர் ஆவார். ஆனால், அதற்கு மாறாக திரு. சோமசுந்தரம் என்பவர் முன்னாள் செயல் அலுவலர் ரெங்கசாமி, முன்னாள் இளநிலை உதவியாளர் சோ. பரமசிவம், முன்னாள் வரி வசூலர்

கோபால் ஆகியோரிடம் மொத்த தொகை ரூ.14,71,365/– (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) கொடுத்துவிட்டதாக தெரிவிப்பது என்பது அப்போது பணியாற்றிய இவ்வலுவலக இதர பணியாளர்கள் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. மேலும், மேற்படி திரு. சோமசுந்தரம் என்பவரே நேரடியாக பேரூராட்சி அலுவலகத்தில் 30.8.2019 (ரூ.5,15,365), 3.9.2019 (ரூ.3,30,000) மற்றும் 4.9.2019 (ரூ.6,26,000) செலுத்தி அதற்கான உரிய ரசீதும் பெற்றுச் சென்றுள்ளார். புகார் மனுதாரரால் ரூ.14,71,365/– மேற்படி மூன்று அலுவலர்களிடம் திரு. சோமசுந்தரம் என்பவரால் வழங்கப்பட்டதாகவும், அதனை அவர்கள் தற்காலிக கையாடல் செய்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய தொகையை ஒருவர் எந்தவித ரசீதும் இல்லாமல் பேரூராட்சிக்கு செலுத்தினார் என்றால் அதற்கான ரசீது பெறவில்லை என்பதை ஏற்க இயலாது. அவ்வாறு குத்தகைதாரர் பேரூராட்சிக்கு தன்னால் செலுத்தப்படவேண்டிய குத்தகை தொகையினை பேரூராட்சிக்கு செலுத்த விரும்பியிருந்தால் அவர் வங்கி வரைவோலை மூலமாகவோ, RTGS மூலமாகவோ பேரூராட்சிக்கு செலுத்தி உரிய அத்தாட்சி பெற்றிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு ஏதும் செய்யவில்லை. மேலும், இதே குத்தகைதாரர் 30.8.2019, 3.9.2019 மற்றும் 4.9.2019–இல் நேரடியாக பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து அப்போதைய செயல் அலுவலர் திரு. ரங்கசாமி அவர்கள் முன்னிலையில் நேரடியாக செலுத்தி அதற்கான உரிய இரசீதினை செயல் அலுவலர் ஒப்பமிட்டு பெற்றுச் சென்றுள்ளார். ஆதலால், திரு. சோமசுந்தரம் என்பவரால் பேரூராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய குத்தகை தொகையினை அன்னாரால் முறையாக பேரூராட்சிக்கு செலுத்தி அதற்கான ரசீது பெற்றிருக்கவேண்டிய நிலையில், பெரிய தொகையான ரூ.14,71,365/–ஐ அலுவலக பணியாளர்களிடம் வழங்கியதாக வைக்கப்படும் குற்றச்சாட்டு ஏற்புடையதாக தெரியவில்லை என்ற போதிலும், ஒருவேளை, அவர் ஏதேனும் தொகை வழங்கியிருந்தால், அதனை பேரூராட்சி அலுவலகம் சார்ந்த பரிவர்த்தனையாக கருத இயலாது; மாறாக அவர்களுடைய தனிப்பட்ட பரிவர்த்தனையாகவே கருத இயலும். அத்துடன் உடன்குடி பேரூராட்சியில் 2019–2020ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.12–இல் பேரூராட்சியின் வாரச்சந்தை குத்தகைதாரர் 2019–2020ஆம் ஆண்டுக்கான குத்தகை தொகையினை ரூ.14,71,365/–ஐ முன்னாள் இளநிலை உதவியாளர் திரு. பரமசிவம் மற்றும் வரி வசூலர் திரு. கோபால் ஆகியோரிடம் 16.4.2019–இல் வழங்கியதாகவும் அதற்கான ரசீது வழங்கப்படவில்லை எனவும் குத்தகைதாரர் புகார் செய்ததாகவும் அதன் அடிப்படையில், அதே குத்தகைதாரர் 30.8.2019, 3.9.2019 மற்றும் 4.9.2019 ஆகிய தினங்களில் மொத்த தொகையையும் செலுத்தி, அத்தொகை வங்கியில் செலுத்தப்பட்டு அதனை சரிபார்க்கப்பட்டுள்ளதாகவும், ஆதலால் நான்கு மாதம் தற்காலிக கையாடல் நிகழ்ந்துவிட்டதாக தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. ஆனால், இத்தணிக்கை பத்தியில் குறிப்பிட்டுள்ளதுபோல, குத்தகைதாரர் திரு. சோமசுந்தரம் என்பவர் இவ்வளவு பெரிய தொகையை ஒரே நாளில் அதாவது 16.4.2019 அன்று அப்போதைய இளநிலை உதவியாளர் மற்றும் வரித்தண்டலரிடம் வழங்கியதாக உள்ள கூற்றுபடி, அப்போதைய செயல் அலுவலர் கவனத்திற்கு அன்றைய தினம் கொண்டுசென்று அதற்கான ரசீது பெற்றிருக்கவேண்டும் என்பதுடன், ஒருவேளை செயல் அலுவலரை தொடர்புகொள்ள இயலவில்லை எனில், வங்கி வரைவோலை மூலமாகவோ, RTGS மூலமாகவோ தொகையை செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் அவர்

தொகையை செலுத்தி ரசீது வழங்கப்படவில்லை என புகார் தெரிவிப்பது இயற்கை நியதிக்கு மாறாக உள்ளது.

11. பேரூராட்சி அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களுக்கு அவ்வப்போது முறையாக தகவல்கள் வழங்கப்பட்டு வந்துள்ளது. பேரூராட்சியில் சட்டப்படியான தகவல் வழங்கும் பதிவேடு, இச்சட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2005ஆம் ஆண்டிலிருந்து, பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும், 2019ஆம் ஆண்டு பதிவேடு சம்பந்தப்பட்ட அப்போதைய இளநிலை உதவியாளர் திரு. சொ. பரமசிவம் என்பவரால் பராமரிக்கப்படாமல் இருந்துள்ளது. அதன் பின்னர், அப்பணியில் பணிப்பொறுப்பேற்றுக்கொண்ட திரு. சு. ராஜா (எ) சுப்பையா என்பவரால் 09.9.2019 முதல் பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது. புகார் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டதுபோல் தகவல் அறியும் உரிமைச் சட்ட பதிவேடு ஏதும் இப்பேரூராட்சி அலுவலகத்தில் அழிக்கப்படவில்லை. இது முற்றிலும் கற்பனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

12. பேரூராட்சி சந்தை குத்தகை தொகை செலுத்துவது குறித்து செய்யப்பட்டுள்ள புகார் மீது ஏற்கனவே பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் உரியவாறு துறை ரீதியான விசாரணைக்கு ஆணையிட்டு, பேரூராட்சியில் பணியாற்றிவந்துள்ள செயல் அலுவலர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் ஆகியோர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி எண்.17–இன்கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண்.3062/2019/பி1 நாள் 22.10.2019இன்படி ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்து வருகிறது. ஆதலால் மேற்கூறிய விவரங்களின் அடிப்படையில் குத்தகைதாரரால் பேரூராட்சிக்கு செலுத்தப்பட்டிருக்கவேண்டிய குத்தகை தொகை பொறுப்பான முறையில் உரியவாறு வங்கி வரைவோலை மூலமோ RTGS பணப்பரிவத்தனை மூலமோ செலுத்தி, அதற்கான அத்தாட்சியாக, உரிய ரசீதினை பேரூராட்சி செயல் அலுவலரை சந்தித்து பெற்றிருக்கவேண்டும் என்ற நிலையில், அவ்வாறு ஏதும் செய்யப்படாமல் அவரே ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019 ஆகிய மாதங்களில் நேரடியாக அலுவலகம் வந்து எழுத்துபூர்வமாக கடிதம் அளித்து குத்தகை தொகையினை செலுத்தி ரசீது பெற்றுள்ளபடியால், இதில் எவ்வித முறைகேடுகளும் நிகழவில்லை என்றும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையான திரு. M. ரெங்கசாமி, முன்னாள் செயல் அலுவலருக்கு காசோலை வழங்கும் உரிமையினை நிறுத்திவைக்கவேண்டும் என்ற கோரிக்கையோ எதிர்மனுதாரர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கையோ எழவில்லை. மேலும், தகவல் அறியும் உரிமை சட்டப்படி பராமரிக்கப்படவேண்டிய பதிவேடு இப்பேரூராட்சியில் தற்போது முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

13. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, புகார் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், மனுதாரரது எழுத்துமூல வாக்குமூலம், உடன்குடி பேரூராட்சி முன்னாள்

செயல் அலுவலர்கள் திரு. ம. ரெங்கசாமி, திரு. ரா. பாலசுப்ரமணியன் மற்றும் தற்போதைய செயல் அலுவலர் திரு. பா. பாபு ஆகியோரது வாக்குமூலங்கள், உடன்குடி பேரூராட்சி முன்னாள் வரி வசூலர் திரு. N. கோபால் மற்றும் உடன்குடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி, தற்போது தற்காலிக பணிநீக்கத்தில் உள்ள திரு. சொ. பரமசிவன் அவர்களது வாக்குமூலம், உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டன:-

❖ மனுதாரர் தமது புகார் மனுவுடன் ஆதார ஆவணமாக இணைத்தனுப்பியுள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அறிக்கையில் "16.4.2019–ல் வசூலிக்கப்பட்ட குத்தகை தொகை ரூ.14,71,365/– 30.8.2019 வரையிலும் பேரூராட்சி கணக்கில் செலுத்தப்படாமலிருந்தது தற்காலிக கையாடலாக கருதப்படுகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட 4.5 மாத காலதாமதத்திற்குரிய வட்டித் தொகை (8%) ரூ.44,141/–ஐ உரிய அலுவலர்கள்வசம் பிடித்தம் செய்து பேரூராட்சி கணக்கில் செலுத்தி, அதன் விபரத்தை தணிக்கைக்கு தெரிவிக்கவேண்டும். மேலும், இந்திய வருமான வரிச் சட்டம் 1961 பிரிவு 269 ST–ன் கீழ், ஒரு நாளில் ஒருவர் ஒரே பரிவர்த்தனையில் ரூ.2,00,000/– அல்லது அதற்கு மேல் ரொக்கமாக பரிவர்த்தனை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில், பணம் பெறும் நிறுவனமானது அரசு நிறுவனம் (Local Authority) ஆதலால் மேற்குறிப்பிட்ட வருமான வரி விதி இப்பரிவர்த்தனையைக் கட்டுப்படுத்தாது என்பதற்கான தெளிவுரையை வருமானவரித் துறையிடமிருந்து பெற்று தணிக்கைக்கு தாக்கல் செய்யவேண்டும்'' என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து, மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, உடன்குடி பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட வாரச் சந்தையை 2019–2020ஆம் ஆண்டிற்கு ஏலமெடுத்த குத்தகைதாரர் திரு. T. சோமசுந்தரம் 16.4.2019–ல் செலுத்திய ரூ.14,71,365/– (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) பெற்றுக்கொண்டு, அதை பேரூராட்சி கணக்கில் கொண்டுவராமல் கையாடல் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

❖ ஆனால், உண்மைக்கு மாறாக, மனுதாரரது புகார் குறித்து உடன்குடி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. ம. ரெங்கசாமி இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள 27.3.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் மேற்குறிப்பிட்ட தணிக்கைத் தடை பற்றி தனது விளக்க அறிக்கையில் ஏதும் குறிப்பிடாமல், மனுதாரர் திரு. சுப்பையா நரம்புத் தளர்ச்சியால் ஏற்படக்கூடிய காக்காவலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டவர் என்றும், திருமணமாகாத நிலையில், அவ்வப்போது மனநலம் குன்றியவரைப் போல் இவரது செயல்பாடுகள் இருக்கும் என்றும், மனுதாரரை கொச்சைப்படுத்தி, அவதூறாக இம்முறைமன்ற நடுவத்திற்கு விளக்கம் அளித்துள்ளார். மனுதாரரை இவ்வாறு விவரித்துள்ளது கண்டிக்கத்தக்கது. நாகரீகமற்ற செயல்.

❖ அதுமட்டுமல்லாது, திரு. M. ரெங்கசாமி, உடன்குடி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரது விளக்கத்தினையே அடிப்படையாகக் கொண்டு, விளக்கம் அளித்துள்ள உடன்குடி பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. சொ. பரமசிவன் (தற்காலிக பணிநீக்கம்) மற்றும் வரித்தண்டலர் திரு. ந. கோபால் ஆகியோரும் தங்களது விளக்க அறிக்கையிலும் மனுதாரரை மேற்குறிப்பிட்டுள்ளவாறு கொச்சைபடுத்தி அவதூறாக விளக்கம் அளித்துள்ளனர்.

❖ கண்ணியம் காத்து, பொதுமக்களுக்கு பணிசெய்யவேண்டிய பொதுப்பணியாளர்களே இவ்வாறு ஒரு புகார் மனுதாரரை தரக்குறைவாக இழிவுபடுத்தி விளக்கமளித்துள்ளதை ஒருபோதும் அனுமதிக்க இயலாது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

❖ தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு காலதாமதமாக பேரூராட்சிக்கு செலுத்தப்பட்ட வார சந்தை ஏலத்தொகை ரூ.14,71,365/—க்கு (ரூபாய் பதினான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து முன்னூற்று அறுபத்தைந்து மட்டும்) நான்கரை மாத (4.5) காலத்திற்குரிய வட்டி (8%) ரூ.44,141/—ஐ (ரூபாய் நாற்பத்தினான்காயிரத்து நூற்று நாற்பத்தொன்று மட்டும்) உரிய அலுவலர்களிடமிருந்து பிடித்தம் செய்து பேரூராட்சி கணக்கில் செலுத்தி, அதன் விவரத்தை தணிக்கைத் துறைக்கு தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், உடன்குடி பேரூராட்சியில் பொறுப்பு வகித்த முன்னாள் செயல் அலுவலர்கள் திரு. ம. ரெங்கசாமி (9.3.2019 முதல் 3.9.2019 வரை பொறுப்பு வகித்தவர்), திரு. ரா. பாலசுப்பிரமணியன் (4.9.2019 முதல் 29.10.2019 வரை பொறுப்பு வகித்தவர்), திரு. பா. பாபு, உடன்குடி பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் (6.7.2020 முதல் தற்போது வரை பணியில் உள்ளவர்) எவருமே நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. இதுவரை அதற்கான செயல்முறை ஆணைகள் (Proceedings) ஏதும் பிறப்பிக்கப்படவும் இல்லை.

❖ தணிக்கைத் துறையால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் நாளது தேதி வரை நிவர்த்தி செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால், உடன்குடி பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் குத்தகைதாரர் திரு. சோமசுந்தரம் என்பவரே நேரடியாக பேரூராட்சி அலுவலகத்தில் 30.8.2019, 3.9.2019 மற்றும் 4.9.2019 ஆகிய தேதிகளில் திரு. ரங்கசாமி அவர்கள் முன்னிலையில் செலுத்தி, உரிய ரசீதும் பெற்றுச்சென்றுள்ள நிலையில், பெரிய தொகையான ரூ.14,71,365/—ஐ அலுவலக பணியாளர்களிடம் வழங்கியதாக வைக்கப்படும் குற்றச்சாட்டு ஏற்புடையதாக தெரியவில்லை என்றும் கூறியிருப்பது, கனி இருப்ப காய் கவர்ந்தற்று என்ற பழமொழியை நினைவு கூர்வதாகும்.

❖ மேலும், பேரூராட்சி சந்தை குத்தகை தொகை செலுத்துவது குறித்து செய்யப்பட்டுள்ள புகார் மீது ஏற்கனவே பேரூராட்சிகளின் இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பேரூராட்சியில் பணியாற்றிவந்துள்ள செயல் அலுவலர்,

வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் ஆகியோர் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17–ன்கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை 22.10.2019ல் வழங்கப்பட்டு, நடவடிக்கை நிலுவையில் இருந்துவருவதாக உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபோதிலும், இம்முறையீட்டு மனு மீதான விசாரணையின்போது, அதற்கான ஆதார ஆவணங்கள் எதனையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. இது அவரது பொறுப்பற்ற செயல் என்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

14. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், தணிக்கைத் துறையால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், மிகவும் அலட்சியமாக செயல்பட்டுள்ள முன்னாள் மற்றும் இந்நாள் உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலர்களை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், வாரச் சந்தை குத்தகை தொகையை தற்காலிகமாக கையாடல் செய்த உடன்குடி பேரூராட்சியில் பணியாற்றிய இளநிலை உதவியாளர் திரு. பரமசிவம் மற்றும் வரித்தண்டலர் ந. கோபால்ஆகியோரை மாவட்ட ஆட்சியர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதிலிருந்து தவறு இழைத்ததால்தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெள்ளத்தெளிவாகிறது. அவ்வாறு இருக்கையில், உடன்குடி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து தற்போது தற்காலிக பணிநீக்கத்தில் உள்ள திரு. பரமசிவம் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலத்தில் மேற்கண்ட காலகட்டத்தில் சொத்துவரி வசூல் மிகக்குறைவாக இருந்ததால் சொத்து வரியை நேர் செய்வதற்காக (Nil balance) மேற்கண்ட ஏலத்தொகையை சொத்துவரி வசூலாக மாற்றி செலுத்தினேன் என்றும், பின்னர் சொத்துவரி செலுத்தத் தவறியவர்களிடமிருந்து வரிவசூல் செய்து, மேற்கண்ட தொகையை காலமாதமாக பேரூராட்சி கணக்கில் செலுத்தியதாகவும் தெரிவித்திருப்பது, இக்குற்றச்சாட்டு குறித்து தெளிவாக தெரிந்திருந்தும் வேண்டுமென்றே இம்முறைமன்ற நடுவ கவனத்தை திசைதிருப்ப அல்லது மூடிமறைக்க அனைவராலும் எடுக்கப்பட்ட கூட்டு முயற்சி என்பது தெளிவாகிறது. எனவே, தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சியில் 2019–2020ஆம் ஆண்டு வார சந்தை ஏலத்தொகையை தற்காலிக கையாடல் செய்து, பின்னர் காலதாமதமாக பேரூராட்சி கணக்கில் செலுத்தியதற்கு பொறுப்பான செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை பேரூராட்சிகளின் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் இருந்துவருவதாக குறிப்பிடப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துவதுடன், தணிக்கைத் துறையின் தணிக்கைத் தடை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 8 சதவிகித வட்டித் தொகை ரூ.44,141/–ஐ (ரூபாய் நாற்பத்தினான்காயிரத்து நூற்று நாற்பத்தொன்று மட்டும்) உரிய அலுவலர்களிடமிருந்து வசூலித்து பேரூராட்சி கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அது குறித்த விவரங்களை தணிக்கைத்துறைக்கு தெரிவித்து தணிக்கைத் தடை நிவர்த்தி செய்திடுமாறும் உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

15. தவறிழைத்து மற்றும் அதற்கு உடந்தையாயிருந்த அனைத்து அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்திருந்த சம்மந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மீதும் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், குற்றச்சாட்டு நிரூபணமான இனங்களில் கடுமையான தண்டனை வழங்கி ஆணையிடவும் பேரூராட்சிகளின் ஆணையரை இம்மான்றம் அறிவுறுத்துகிறது.

Wanton and criminal embezzlement of Government money, connivance of District Town Panchayat superior officials in the Udangudy Town Panchayat organization, criminal negligence by the delinquents in the petition and uncharitable remarks on the supposed physical disabilities of the petitioner by the officials in their explanation warranting stiff action by the Directorate of Differently Abled for this abuse and offence require the most stringent response from the Commissioner of Town Panchayats in the instant case.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. K. சுப்பையா,
த/பெ. லேட் கண்ணன்,
31/4, நடுத்தெரு, உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம்–628 203

செயல் அலுவலர், உடன்குடி பேரூராட்சி,
உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம்–628 203

திரு. ம. ரெங்கசாமி (உடன்குடி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர்)
தற்போது செயல் அலுவலர், புழுவப்பட்டி பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

திரு. ரா. பாலசுப்பிரமணியன் (உடன்குடி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர்)
தற்போது செயல் அலுவலர், கயத்தாறு பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம்

அரசு செயலாளர்,
மாற்று திறனாளிகள் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9

இயக்குநர்,
மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரகம்,
லேடி வெல்லிங்டன் கல்லூரி வளாகம், சென்னை–600 005.

திரு. N. கோபால் (உடன்குடி பேரூராட்சி முன்னாள் வரிவசூலர்)
தற்போது வரித்தண்டலர், திருவைகுண்டம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்–628 601

திரு. சொ. பரமசிவன், (உடன்குடி பேரூராட்சி முன்னாள் இளநிலை உதவியாளர்
(தற்காலிக பணிநீக்கம்)), 67, காமராஜபுரம் காயல்பட்டினம் ரோடு
திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்–628 215

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)
(தொடர் நடவடிக்கையை கண்காணிக்கவேண்டி)

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

17/12/21

செயலாளர்

17.12.21